[1981 ஏப்ரல் 10]

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே பதில் அளிக்கையில் 114 துறைகளில் 85 துறைகளில் இருந்துதான் அரசுக்கு ஆண்டறிக்கை கிடைத்திருக்கிறது என்று சொல்லியிருக்கிறேன். அதேபோன்று, 54 பொதுநிறுவனங்களிலே, 28 நிறுவனங்களில் இருந்துதான் இதுவரையில் ஆண்டறிக்கை கிடைத்துள்ளது. அதை வைத்துதான் 8%, 9% என்று எடுத்துச் சொல்லி இருக்கிறேன். அந்த விவரங்கள் முழுமையாக கிடைத்த உடன் அரசு ஒரு விரிவான அறிக்கையை இந்த அவைமுன் வைக்கும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஆதி திராவிட நல மாநில குழு அமைக்கப்படவில்லை என்று சொல்லி இருக்கிறார்கள். அந்தக் குழு அமைக்கப்பட்டு, தற்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டிருக்கிறது வந்த உடன் அது அறிவிக்கப்படும்.

சு. பாபம்பாடியிலுள்ள அரிசன நலத்துறை பள்ளிக் கட்டிடம்

*வினா எண். 666 திரு. த. வேணுகோபால்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தண்டராம்பட்டு தொகுதியில் உள்ள சு. பாபம்பாடி அரிசன நல இலாகா பாடசாலைக் கட்டிடம் பழுது அடைந்து இடிந்து விழும் நிலையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: அ) இல்லை

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு பேரவைத் தலைவா அவர்களே, அமைச்சர் அவர்கள் இக்கேள்விக்கு இடம் இல்லை என்று கூறினார்கள். ஆனால், அந்த சு. பாபம்பாடி கிராமத்தில் உள்ள அந்தப் பள்ளியின் கூரைக் கட்டிடம், மண் சுவர் இடிந்து விழுகின்ற நிலையிலே இருக்கிறது. தற்போது அங்கே உள்ள குழந்தைகள் மரத்தடியிலே அமர்ந்து படித்துக் கொண்டு இருக்கிறார்கள். இந்த நிலையைப் போக்க அரசு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது என்பதைக் கேட்கவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னிடம் உள்ள தகவல்படி திருவண்ணாமலை வட்டம் சு. பாபம்பாடி ஓராசிரியர் பள்ளி, அவ்வூர் கிராம மக்களால் கட்டிக் கொடுக்கப்பட்டு, அந்தத் தனியார் கூரையில் அந்தப் பள்ளி இயங்கி வந்தது. அந்தக் கட்டிடம் பழுது பட்டதால், இத்துறை 4,975 ரூபாய்கள் செலவில் வேறு புதிய கூரை கட்டிடத்தை 16. 3. 1980 அன்று கட்டி முடிக்கப்பட்டு மேற்கண்ட பள்ளிக்கூடம் நல்ல முறையிலே, அந்தப் புதிய கட்டிடத்திலே இயங்கி வருகிறது.

1981 ஏப்ரல் 10]

[முற்பகல் 10.10]

திரு. த. வேணுகோபால் : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 16–3–1980 அன்று புதிய பள்ளிக் கட்டிடம் கட்டப்பட்டு, அதில் அந்தப் பள்ளி நல்ல முறையில் இயங்கி வருகிறது என்று கூறினார்கள். மரத்தடியில் அந்தப் பள்ளி நடந்து வருகிறது என்று நான் குறிப்பிட்டேன். அந்தப் புதிய கூரைக் கட்டிடத்திற்கு பதிலாக, ஆதிதிராவிட நலத் துறை மூலமாக நடத்தப் பெறும் அந்தப் பள்ளிக்கு நிரந்தரக் கட்டிடம் கட்ட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : பேரவைத் தலைவர் அவர்களே, அரசு பரிசீலனை செய்யும்.

அரிசனங்களுக்கு 'ஆதி திராவிடர்கள்' என்று பெயர் மாற்றம்

* வினா எண். 667 திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக் விடையளிப்பாரா;

(அ) தமிழக அரசு உத்திரவுப்படி ஆதிதிராவிடர்கள் என்ற பெயர் மாற்றம் குறித்து அச்சமூக மக்களிடமிருந்து ஆட்சேபணைகள் ஏதும் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் பெயர் மாற்றம் குறித்து அரசு மறு பரிசீலனை செய்யுமா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி :— அ) ஆம்

ஆ) இம் மனுக்கள் பரிசீலனையில் உள்ளன.

திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆதித் திராவிடர் என்ற சொல் அந்தச் சமுக மக்களிடையே உள்ள ஒரு பிரிவினரைத்தான் குறிக்கிறது என்பதை அரசு அறியுமா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாழ்த்தப்பட்டோர் ஜாதிப் பட்டியலில் இருக்கின்ற பிரிவுகளில் 'ஆதித்திராவிடர்' என்கிற ஒரு இனம் இருக்கிறது. ஆனால் தற்போது அரசு ஆதித்திராவிடர் என்று பன்மையில் அனைத்துப் பிரிவினரையும் இணைக்கும் வகையில் தான் அமைத்து இருக்கிறது.